
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ARAN International e-Journal of Tamil Research

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026

கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# சிற்பியின் ஒரு கிராமத்து நதி சித்திரிக்கும் கிராமத்து வாழ்வியல்

## Sirpi's Oru Kramathu Nathi Depicts Village Life


மு.கோடீஸ்வரி
பதிவுஎண்: BDU2510632781301
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி(த)
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சி – 620018

முனைவர் ந.சுபா
இணைப்பேராசிரியர் & நெறியாளர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி(த)
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சி – 620018

**M. Kodeeshwari**
**Reg. No: BDU2510632781301**
**Research Scholar (full time)**
**Department of Tamil**
**Cauvery College for Women(A)**
**(Affiliated for Bharathidasan University)**
**Trichy - 620018**

**Dr. N. Subha**
**Associate professor & Research guide**
**Department of Tamil**
**Cauvery College for Women(A)**
**(Affiliated for Bharathidasan university)**
**Trichy - 620018**



*Abstract*

*The Sangam Tamils revered and worshipped nature, living in harmony with it. They structured their way of life in unity with the natural world, leading a life of beauty and grace. They valued relationships, excelled in hospitality, and made love and righteousness the core principles of their lives, thereby enriching both themselves and their communities. In contrast, in contemporary times, with the notion of "civilization"*

*as a weapon, people have moved towards modernity. Traditional practices and customs, once prevalent in rural communities, are now on the brink of extinction. In the poem " Oru Kramathu Nathi" by the poet sculptor, the beauty of the village, the significance of the flowing river, the rural way of life, and the memories of the people are documented. The poet not only captures these aspects but also portrays the impending destruction of nature and rural culture, alongside the people's immersion in superstitions even as scientific advancements soar into space. In today's mechanized world, the essay highlights that loving nature is what keeps life alive and vibrant.*

*Key words : Nature, River, Relationship, Culture, Tradition, Lifestyle, Rural Memories*

**ஆய்வுச் சுருக்கம்**

சங்கத் தமிழர்கள் இயற்கையைப் போற்றி வணங்கி, இயற்கைக்கு அஞ்சி வாழ்ந்து வந்தனர். தமது வாழ்வியலை இயற்கையோடு ஒன்றியதாக அமைத்துக் கொண்டு எழில் சூழ்ந்த வாழ்வினை மேற்கொண்டு வந்தனர். உறவுகளை நேசித்து விருந்தோம்பலில் சிறந்து அன்பையும் அறத்தையும் வாழ்வியல் நெறியாகக் கொண்டு தானும் சிறந்து தன் சுற்றத்தையும் சிறப்புறச் செய்து பயனுள்ள வாழ்வை வாழ்ந்தனர். தற்காலத்தில் நாகரிகம் என்ற சொல்லாடலை ஆயுதமாகக் கொண்டு நவீன மயமாக்கலை நோக்கி மக்கள் நகர்ந்து விட்டனர். கிராமத்து மக்களிடம் எஞ்சி இருந்த பழக்கவழக்கங்களும் பாரம்பரியமும் தற்காலத்தில் அழிவின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறது. கவிஞர் சிற்பியின் கிராமத்து நதி கிராமத்தின் எழில், அங்கு பாய்கின்ற நதியின் சிறப்பு, கிராமத்து மக்கள் வாழ்வியல், வெகுளித்தனமான மக்களின் நினைவுகள் போன்றவற்றைப் பதிவு செய்ததோடு நின்று விடாமல் அழிவின் விளிம்பில் உள்ள இயற்கை மற்றும் கிராமத்துப் பண்பாடு ஆகியவற்றையும், அறிவியல் வளர்ச்சி விண்ணைக் கடந்து செல்லும் காலத்தில் மூடநம்பிக்கையில் மூழ்கித் திளைத்திருக்கும் மாந்தர்களையும் பதிவுசெய்து உள்ளார். இயந்திரமயாகிக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் இயற்கையை நேசிப்பதே வாழ்க்கையை உயிர்ப்போடு வைத்திருக்கும் என்பதை சுட்டிக்காட்டும் வண்ணம் எழுந்ததே இக்கட்டுரை.

**திறவுச்சொற்கள்**

இயற்கை, நதி, உறவுகள், பண்பாடு, பாரம்பரியம், வாழ்வியல், மண்சார் நினைவுகள்

**முன்னுரை**

தமிழர்களின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் எடுத்தியம்பக்கூடிய தொடர்ச்சியான பல படைப்புகள் இக்கால இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. அவற்றில் கவிஞர் சிற்பி அவர்களின் ஆக்கப்பூர்வ படைப்பான ஒரு கிராமத்து நதி சாகித்ய அகாதமி பரிசினைப் பெற்றது. உணர்ச்சியுள்ள எந்த மனிதராலும் எளிதில் கடக்க முடியா ஒன்று நினைவுகள். அவ்வாறு சூழலால் சுயவாழ்வியலைத் தொலைத்து, நகரங்களில் இயந்திரங்களோடு இயங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு தனது சுயத்தை இப்பதிவு நினைவூட்டுகின்றது. காலத்தில் கட்டாயத்தால் மனிதர்களின் மனமாற்றத்தால் அரசியல் படையெடுப்பால் அழிந்து வரும் இயற்கையையும், உறவுகளையும் பதிவு செய்கிறது இப்படைப்பு.

**இயற்கைச் சங்கமம்**

**"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றதும்"**[1]

**"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்"**[2]

**"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்"**[3]

என்ற சிலப்பதிகார வாழ்த்துப் பாடல் வரிகள் சங்க இலக்கியத்தின் தொடர்ச்சியாக காப்பிய காலத்திலும் தமிழர்கள் இயற்கையைப் போற்றி வணங்கி வாழ்ந்தார்கள் என்பதற்குச் சான்றாக அமைகின்றன.

தமிழர்களின் நாகரிகம் ஆற்றங்கரை நாகரிகம். நாகரிகத்தின் தொட்டில் நதிகள்; மனிதனின் ஆதியும் அந்தமும் ஆக, நதி அமைகின்றது; பிறப்பில் துவங்கி அனைத்து சுப நிகழ்வுகளிலும் பங்கெடுத்து உயிரற்ற மனிதன் உறங்கும் புகலிடமாகவும் நதியின் கரை அமைகின்றது; எத்தனையோ இதிகாசங்களும் சரித்திரங்களும் இதன் கரையில் நடந்தேறிய வரலாறு தமிழ் வரலாறு.

**"தேம்ஸ் நதிக்கரையில் லண்டன் நகரம் உள்ளது. நைல் நதிக்கரையில் கெய்ரோ நகரம் உள்ளது. செக்கோஸ்லோவோவின் தலைநகரமாகிய பிராக்கில் பெரியநதி ஓடுகிறது. இதே போன்று கங்கை நதிக்கரையில், கோதாவரி நதிக்கரையில், காவிரி நதிக்கரையில் இன்று திருச்சி ஸ்ரீரங்கம் போன்ற நகரங்கள் உள்ளன. காவிரி நதி கடலோடு கலக்கும் இடத்தில் புகார் நகரம் இருந்தது. வைகை நதிக்கரையில் மதுரை உள்ளது. தாமிரபரணி நதிக்கரையில் திருநெல்வேலி உள்ளது. இவ்வாறு நதிக்கரையில் தான் நகரங்கள் அமைப்பது இயல்பு"**[4] என்கிறார் ச.வே.சுப்ரமணியன்

மனிதர்களின் உடல் தூய்மை நீரை ஆதாரமாகக் கொண்டே அமைகின்றது. அதனாலே வள்ளுவர்,

**“புறந்தூய்மை நீரால் அமையும்”5**

என்று எடுத்துரைத்துள்ளார்.

ஒரு கிராமத்து நதி என்ற தலைப்பில் உள்ள கவிதையில் தன் வாழ்க்கையோடு பிணைந்திருந்த நதியின் சிறப்பை சிற்பி அவர்கள் எடுத்துரைக்கிறார்

**ஆடி ஆடி நகரும்**

**நடனக்கார நதி**

**இல்லாவிட்டால்**

**சபிக்கப்பட்ட இந்தக் கிராமத்தை**

**யார் சீண்டுவார்கள்? 6**

மேற்கண்ட கவிதை வரிகள் வாயிலாக சிற்பி நீரின்றேல் வாழ்வியல் இல்லை என்பதையும் ஆறுபாயும் ஊர்கள் வளம்பெற்றுத் திகழ்ந்ததையும் சுட்டுகின்றார்.

கிராமப்புறங்களில் வாழும் மாந்தர்களுக்கு நதி மற்றொரு தாய். இன்ப துன்பங்களில் ஆறுதல் அளிப்பவளாக அன்னை வீடாக அமைகின்றது. காதல் கவிதைகள் பிறக்கும் அந்தரங்க உறைவிடமாக இதன் கரைகள் விளங்குகின்றன.

**“காலைக் கடன்**

**மாலைக் கடன்**

**ஈமக் கடன் தீர்க்கும்**

**இயற்கை வங்கியானதுவும்**

**இந்த நதிதான்**

**இதே நதிதான்”7**

என்ற வைரமுத்துவின் வரிகளும் மனிதனின் வாழ்நாளில் நதி பெறக்கூடிய இடத்தைப் பதிவு செய்கிறது.

**“தானும் உணவாகி**

**மீனும் உணவாகும்**

**இந்த நதிக்கு**

**நானும் உணவாவேன்"** [8]

மேற்கண்ட வரிகள் நீரின்றி அமையாது உலகு , நீரின்றேல் வாழ்வியல் இல்லை என்பதையும் ஆறுபாயும் ஊர்கள் வளம்பெற்றுத் திகழ்ந்ததையும் சுட்டுகின்றது.

**மரங்கள் மண்ணின் விரல்கள்**

மனிதர்களின் இன்றியமையாத் தேவை உணவு, உடை, உறைவிடம் அத்தகைய அனைத்திற்கும் கரம் கொடுக்கும் இயற்கை அன்னையின் கொடையாக மரங்கள் விளங்குகின்றன. தன் வாழ்க்கைப் பயணத்தில் உணர்வுகளோடு பயணிக்கும் சக மனிதனைப் பயன்படுத்திவிட்டு நகரும் இன்றைய நாகரிக மனிதர்களுக்கு நடுவில், தான் வாழ்ந்த வளர்ந்த கிராமத்தில் வீற்றிருக்கும் அத்தி மரத்தை நினைவில் வைத்து அதன் அருமையைக் கவிஞர் பாடியிருப்பது போற்றுதலுக்குரியது.

**"படுகளத்தில்**

**வேலெடுத்து நிற்கும்**

**அண்ணன்மார் சுவாமிகள்போல்**

**அந்த அத்திமரமும்**

**அடர்ந்து சுற்றிய நாணல் புதரும்**

**கெத்துக் கெத்தென்று**

**ஆற்றங் கரைக்கொரு**

**நிரந்தரக் காவலனாக"** [9]

சிற்பி தன்னுடைய கிராமத்து நதிக்கரையில் வீற்றிருந்த அத்திமரத்தைக் காவல் தெய்வமாக உவமித்துக் கூறுகின்றார்.

கிராமப்புறங்களில் வாழ்பவர்களின் ஒவ்வொரு நாளிலும் மரங்களும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. வயலில் வேலை செய்பவருக்கு ஓய்வெடுக்கும் நிழற்குடையாக, உணவருந்தும் இடமாக, ரகசியங்கள் பரிமாறும் இடமாக,

இளம் பிஞ்சுகள் விளையாடி மகிழும் இடமாக, வம்பு வழக்குகளுக்குத் தீர்வு கிடைக்கும் இடமாக அமைகின்றது.

இதுபோன்று, சங்க இலக்கியத்தில் ஒரு பெண் அவளுடைய அன்பிற்குரிய காதலனை அந்த மரத்தின் கீழ் சந்திக்கிறாள். அவன் அவளுடன் அன்பு மொழி பேச முற்படுகிறான். அவள் பேச மறுக்கிறாள். அதற்குக் காரணம் சொல்கிறாள். இந்தப் புன்னை மரம் எனக்குத் தமக்கையாகும் என என் அன்னை சொல்லியுள்ளாள். எனவே, என் தமக்கையின் முன்னிலையில் உங்களுடன் பேச எனக்கு நாணமாக உள்ளது எனக் கூறுகிறாள்.

**“அம்ம நாணுதும் நும்மொடு நகையே**

**விருந்தின் பாணர் விளர்இசை கடுப்ப**

**வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்**

**துறைகெழு கொண்க நீநல்கின்**

**இறைபடு நீழல் பிறவும்ஆர் உளவே”**[10] (நற்றிணை - 172)

சங்ககாலம் தொட்டே மரத்துடன் உறவுபூண்டு பேணிக்காத்து வந்துள்ளனர் என்பதனை இவ்வடிகள் உணர்த்துகின்றன.

**“மூர்க்கத் தனமான வெட்டும் குத்தும்**

**வடுக்களாய்க் கிடக்கும்**

**அடிமரத்தில்....**

**அக்கி நோய்க்கு அத்திப்பால்**

**சேகரித்த அடையாளங்கள்”**[11]

எத்துணை மூர்க்கத்தனமாக மனிதர்கள் மரங்களை வெட்டினாலும் காயப்படுத்தினாலும் மரங்கள் மனிதர்களுக்கு நன்மை செய்கின்றன. அத்தகைய மரங்களில் ஒன்றான அத்தி மரத்தால் விளையும் பயனைப் பதிவு செய்துள்ளார். இயற்கையோடு இயைந்த வர்ணணைப் பதிவுகளுக்கிடையில் அக்கி நோய்க்கு அத்திப்பால் சிறந்த மருந்து எனும் மருத்துவப் பதிவையும் விட்டுச் செல்கிறார்.

**“மனிதனின் முதல் நண்பன் மரம்**

**மரத்தின் முதல் எதிரி மனிதன்**

**ஆயுதங்களை மனிதன்**

**அதிகம் பிரயோகித்தது**

**மரங்கள் மீதுதான்''**[12]

என்ற கவிஞர் வைரமுத்துவின் வரிகள், மனிதனின் வளமான வாழ்விற்கு நட்புக்கரம் நீட்டும் மரங்களுக்கு மனிதர்கள் காயங்களை மட்டுமே பரிசாக அளிப்பதை உணர்த்துகின்றன.

ஊருக்குக் காவலனாகவும் இயற்கையின் அடையாளமாகவும் பயன்களை மட்டும் அள்ளிக் கொடுத்த அத்திமரம் இன்றைக்கு இல்லாமல் இருப்பதை எண்ணி,

**“நாற்பது இலையுதிர்காலம்**

**கடந்து போன பின்**

**ஆற்றங் கரையோரம்**

**காவல் இருந்தது**

**ஒரு ஞாபகம் மட்டும்''**[13]

நேற்று உட்கொண்ட உணவுகூட என்னவென்று தெரியாத இன்றைய காலகட்டத்தில், சிறுவயதிலிருந்து பார்த்து நேசித்த மரம் இன்று இல்லை என்ற நினைவின் வருத்தத்தைப் பகிர்கின்றார்.

**கிராமத்து மைந்தர்கள்**

உறவு என்பது அன்பின் வெளிப்பாடு; பண்பின் அடையாளம். சிறந்த உறவுகளும் உணர்வுகளுமே ஆறறிவு உயிரை மனிதனாக்குகின்றன. உறவுகளை நேசிப்பதிலும், பேணுவதிலும் சிறந்துவிளங்கக் கூடியவர்கள் கிராமத்துவாசிகள். எளிமையான வாழ்வு, கள்ளம் கபடம் அற்ற பேச்சு, உண்மையான அன்பு, எளிய அணுகுமுறை இவற்றை அடையாளமாகக் கொண்டுள்ள தமது பிறந்த மண்ணில் வாழும் உறவுகளை சிற்பியின் கவிதைகள் புலப்படுத்துகின்றன. பாரம்பரியத்தின் பண்பாட்டுச் சின்னங்களாக வலம்வரும் மக்களைச் சிற்பி இக்கவிதை நூலில் சித்தரித்துக் காட்டுகின்றார்.

உயிர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தியவள்; ஆயிரம் உறவுகள் இம்மேதியினில் வந்து சென்றாலும் என்றைக்கும் அழிக்க முடியாத உறவு; உதிரத்தை உணவாகக் கொடுத்தவள்; வாழும் காலம் முழுவதும் தனக்காக வாழாமல் தன் பிள்ளைக்காக வாழும் அம்மா என்ற ஒற்றை உறவுக்கு ஈடு இணை ஏதும் கூறி விட முடியாது. அத்தகைய தன் தாயைப் பற்றி

**“அழித்து எழுதமுடியாத**

**சித்திரம் ஒன்றுண்டு-**

**அம்மா”** [14]

**“நேசிப்பு.... நேசிப்பு**

**புருஷனைப் போல**

**பண்ணையத்தையும்**

**குழந்தைகளைப் போலவே**

**எருமைகளையும்!**

**உறவுகளைப் போலவே**

**அக்கம் பக்கத்தையும்”** [15]

*நேசிப்பு ஒன்றனையே வாழ்வியல் நெறியாகக் கொண்டு அனைத்து உயிர்களையும் நேசிக்கும், தன் மனதில் நிற்கும் சித்திரம் போன்றவள் தன் தாய் என்று பெருமைப்படுத்துகின்றார்.*

*அம்மாவின் அன்பில் திளைத்து அப்பாவின் கண்டிப்பில் பயந்து தாத்தா பாட்டியின் மடியில் தவழ்ந்து வளர்ந்த கடைசித் தலைமுறை மறையத் துவங்கிவிட்டது. இன்றைய தலைமுறை அலைபேசியில் அறிமுகமில்லா மனிதர்களிடம் அன்பைத் தேடுகின்றனர்; இணைய விளையாட்டில் இன்பமுறுகின்றனர் ; தாத்தாவும் பாட்டியும் தூரத்து உறவாக மாறிவிட்டனர்; தூரத்து உறவினர்கள் முகமறியா மனிதர்களாகிவிட்டனர். இயந்திரமான போட்டிகள் நிறைந்த உலகில், தன் வாழ்வினை நிறைவானதாக மாற்ற எண்ணி, நிம்மதியைத் தொலைத்து, உறவுகளைக் கடந்து, மகிழ்ச்சியைக் காணக்கிடைக்காத பொருளாக வெளியுலகில் தேடிக்கொண்டுள்ளனர். எஞ்சி இருப்பது இது போன்று பலரது நினைவுளை சுமக்கும் காகிதப் புத்தகங்கள் மட்டும் தான்.*

**“செம்மண் படிந்த என் தலையை**

**மடியில் சாய்த்து**

**ஈர்க்கோதியில் கீறிக் கீறிச்**

**சடக்குச் சடக்கென்று**

**பேன் குத்துவாள்**

**இந்தப் பாழுஞ் சனியனுக**

**தம்பி ரத்தத்தை**

**எப்படிக் குடிச்சுருக்குது பாரு**

**என்று வசை பாடுவாள்”**16

தன்மீது அக்கறையும், தீராத பாசமும் கொண்டு வெகுளித்தனத்தால் தன்னை வசப்படுத்தி, கணவனை இழந்து தனிஆளாக பிள்ளைகளைவளர்த்தெடுத்த தன் அக்காவின் நினைவை அக்கா என்ற கவிதையில் நினைவுகூர்ந்துள்ளார்.

இன்னும் எத்தனையோ மனிதர்கள் தெற்கு வள்வுப் பாட்டையா, மாப்பிள்ளைக் கவுண்டர், இளம் பருவத் தோழன் ஆறுமுகம், வெள்ளைச்சாமியார், ஊமையன், நடுக்காட்டு பெரியசாமி எனத் தன் கிராமத்து உறவுகளுடன் வாழ்ந்த அனுபவங்களை விவரித்து சென்றிருக்கிறார். இக்கவிதைகள் வாசிக்க்க்கூடிய ஒவ்வொருவருக்கும் தொலைத்த தங்கள் கிராமத்து வாழ்வியலை நினைவுபடுத்தும்.

**“தவிட்டுப் புறாத் தெரியுமா?**

**என்று கேட்டான் ஒருதரம்.**

**மௌனமாய் உதடு பிதுக்கியபோது**

**ஏளனப் பார்வையில் கீறிவிட்டுத்**

**தரையில் படுத்தவாக்கில்**

**கொட்டைச் செடிப்புதரில்**

**குறிபார்த்துக் கல்லெறிந்தான்**

**சொல்லி வைத்தாற் போல் பறந்தன**

**ஒரு ஜோடித் தவிட்டுப் புறாக்கள்**

**எங்கள் ஊர் சலீம் அலியை**

**எவருக்கும் தெரியவில்லை”**17

பாடம் சொன்னவர்கள் என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள இக்கவிதை வரிகள் கிராமத்தில் அனுபவ அறிவால் சிறந்து விளங்கக்கூடியவர்களின் ஞானம் வெளியில் தெரிவதே இல்லை என்ற வருத்தத்தைப் பதிவு செய்கின்றது.

**நம்பிக்கைகள்**

கிராமப்புறங்களில் காலம்காலமாக சில நம்பிக்கைகள் அழியாது வேரூன்றி மக்களிடம் நிலவுகின்றன. குறிப்பிடத்தகுந்த ஒன்று மழை வருவதற்காக வருண பகவானை வேண்டி சில வேண்டுதல்களை நிறைவேற்றினால் மழை வரும் என்பது மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

**"மானத்தை நம்பியல்லோ**

**ஐயோ வருண தேவா**

**மக்களையும் பெத்துவிட்டோம்**

**மானம் செழிக்கவில்லை**

**ஐயோ வருண தேவா**

**மக்க வயிறு வாடுதையா**

**ஐயோ வருண தேவா"**[18]

பெண்கள் சேர்ந்து தெருத்தெருவாகச் சென்று கண்ணீருடன் பாடி மழைக் கும்மிக்கொட்டி வேண்டுதல் வைக்கின்றனர்.

**"சரம் சரமாய் நின்று**

**குடம் குடமாய்த் தண்ணீரை**

**விநாயகர் மேலே**

**விட வேண்டும் மூன்று நாள்**

**விநாயகர் மேலே**

**விழுந்த தண்ணீர்**

**படி கடந்து நடை கடந்து**

**பாறைமேல் ஏறிப்போய்**

**ஆறுவரை சேர வேணும்"**[19]

இது போன்ற வேண்டுதல்களை கிராமத்தில் உள்ள மக்கள் இணைந்து செய்து கொண்டிருக்கின்ற பொழுது மழை பொழிகின்றது. இது போன்ற பதிவுகள் கிராமப்புறங்களில் உள்ள மக்களின் நம்பிக்கை மற்றும் பழக்கவழக்கங்களை மட்டும் எடுத்துக்காட்டவில்லை, அவர்களின் ஒற்றுமையை உணர்த்துகின்றது. கிராமத்தில் கடைசித் தெருவில் யாரோ ஒருவருக்கு ஆபத்து என்றால், முதல் தெருவில் வசிப்பவர் விரைந்தோடுவார். ஆனால் நகர வாழ்வில் அடுக்குமாடிக் குடியிருப்பில் அடுத்த வீட்டில் என்ன நிகழ்தாலும் ஏன் ? என்று கேட்க நேரமில்லாமல் தன்சுயத்தைப் பற்றி சிந்திப்பவர்கள்தான் அதிகம்.

**சாடல்கள்**

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என அனைத்து உயிர்களையும் அன்பால் அரவணைத்து, சுற்றம் மகிழ, இயற்கை எழில்சூழ , விண்ணையும் மண்ணையும் வணங்கி வாழ்தவர்கள் கிராமத்து மாந்தர்கள்.

**"பாழாய்ப்போன கட்சி அரசியலும்**

**படையெடுப்பு நடத்தியிருக்கும்**

**தொலைக்காட்சியும்**

**அங்கங்கே அழுக்கை இழுக்கியிருந்தாலும்**

**சராசரி வாழ்வில் தும்பைப் பூ மனிதர்கள்"**[20]

தும்பைப் பூவின் வெண்மையான நிறத்தைப் போன்று, வெண்மையான மனம் கொண்டு வஞ்சமில்லா எண்ணம் கொண்டிருந்த கிராமத்து மாந்தர்களை தற்போதைய அரசியலும், ஊடகங்களும் படையெடுத்து அவர்களின் வாழ்வியலை அழுக்காக்கிவிட்டதாக சாடியுள்ளார்.

**"வெளுத்ததெல்லாம் பால் என்று**

**நம்பியிருந்தவர்கள் இடையே**

**கிடைத்தெல்லாம் லாபம் என்று**

**சிலர் ஊடுருவி விட்டனர்"**[21]

மேற்கண்ட சிற்பியின் வரிகள் அழிந்து வரும் பண்பாட்டையும், பழக்கவழக்கங்களையும், அரசியல் ஊடுருவல்கள் கிராமத்தையும் விட்டுவைக்கவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றன.

**இன்றைய நிலை**

தனக்கென ஒரு பண்பாடு, பழக்க வழக்கம், சப்தங்கள் நிறைந்த நகரத்தைக் கடந்து அமைதியின் பிறப்பிடமாக, இயற்கைத் தாயின் உறைவிடமாக, குயில்களின் ராகமும், மயில்கள் நடனமும் இன்பமளிக்க, கள்ளம் கபடமற்று அனைவரையும் நேசிக்கும் மக்கள் எனத் தனி வாழ்வியலை கிராமங்கள் கொண்டிருந்தன.

சூழ்நிலை மற்றும் வருவாயைக் காரணமாகக் கொண்டு நகரங்களை நோக்கிப் படையெடுத்த சில மக்களும் மனநிம்மதியாக , மகிழ்வாக , உறவுகளுடன் இணைந்து வாழ தாங்கள் செல்லக்கூடிய விழாக்கால விடுமுறையை எண்ணி வருடம் முழுதும் காத்திருப்பர்.

**“அழிகிற கிராமத்துப் பண்பாடு**

**பிழிகிறது மனதை**

**எல்லாவற்றுக்கும் சாட்சியாய்**

**‘எனக்கென்ன’ என்று**

**அவலத்தை மறைத்துக்கொண்டு**

**தன் பாட்டுக்குப் போகிறது**

**அந்தக் கிராமத்து நதி”**[22]

இவ்வாறு அனைத்து தரப்பட்ட மக்களும் நேசிக்கக் கூடிய வாழ்வியல் கிராமங்களில் தான் கிடைக்கின்றன. அவ்வாறு இருந்த கிராமத்து வாழ்வியல் பழக்க வழக்கங்கள் மக்களின் மனநிலை என அனைத்தும் அழிவின் விளிம்பில் நிற்கின்றன என்பதன் ஆதங்கத்தை கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

**முடிவுரை**

காலத்தைக் காட்டும் இலக்கியகள் மனிதனின் வாழ்க்கையையும், பண்பாட்டையும், பழக்கவழக்கங்களையும் பறைசாற்றுகின்றன. இக்கால இலக்கியங்கள் பழைமையைப் போற்றி, நடைமுறை சிக்கல்களுக்குத் தீர்வு தேடுகின்றன. சமுதாயத்தில் நடந்தேறும் குற்றங்களுக்கு சவுக்கடிகளாக, கேள்விகளால் துளைக்கின்றன. அவ்வகையில் கவிஞர் சிற்பியின் கிராமத்து நதி, கிராமத்துப் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் போற்றுகின்றது. இயற்கையின் அங்கங்களான

நதியின் சிலுசிலுப்பும், மரங்களின் பசுமையும் வார்த்தைகளால் விருந்தளிக்கின்றன. கள்ளம் கபடம் இல்லா மாந்தர்கள் உறவின் உன்னதத்தை உணர்த்துகின்றன.

ஆனால் , காலத்தின் கட்டாயம், "மாற்றம் ஒன்றே மாறாதது" என்ற தத்துவம் வென்றுவிட்டது. இன்றைய காலத்தில் கிராமத்துப் பண்பாடும், பழக்கவழக்கங்களும் மாறிவிட்டது. மாந்தர்களின் மனம் மாறிவிட்டன. இயற்கையும் அழிவின் விழிம்பில் நின்றுகொண்டிருக்கிறது. அறிவியலோடு சேர்ந்த வாழ்க்கை வசதி வாய்ப்புகளைத் தரலாம், இயற்கை சூழ்ந்த வாழ்க்கை நிம்மதியைத் தருகிறது.

**அடிக்குறிப்பு**

1. ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உரையாசிரியர்), சிலப்பதிகாரம் மூலமும் உரையும், ப. 45
2. மேலது, ப. 45
3. மேலது, ப.45
4. ச.வே.சுப்ரமணியன், கானல்வரி, ப. 38
5. ப. சுப்பிரமணியன், திருக்குறள் தெளிவுரை, குறள் எண். 298
6. சிற்பி, ஒரு கிராமத்து நதி, ப. 56
7. வைரமுத்து, தமிழுக்கு நிறமுண்டு, ப. 57
8. சிற்பி, ஒரு கிராமத்து நதி, ப. 14
9. மேலது, ப. 20
10. கு.வெ.பாலசுப்பிரமணியன்(உரையாசிரியர்), நற்றிணை, ப. 315
11. சிற்பி, ஒரு கிராமத்து நதி, ப. 20
12. வைரமுத்து, இந்தப் பூக்கள் விற்பனைக்கு அல்ல, ப. 88
13. சிற்பி, ஒரு கிராமத்து நதி, ப. 22
14. மேலது, ப. 30
15. மேலது, ப. 31
16. மேலது, ப. 90
17. மேலது, ப. 54
18. மேலது, ப. 80
19. மேலது, ப. 81

20. மேலது, ப. 10
21. மேலது, ப. 10
22. மேலது, ப. 11

**துணைநூற் பட்டியல்**


1. பாலசுப்பிரமணியன்.கு.வெ, நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, ஆறாம் பதிப்பு, 2017
2. சிற்பி, ஒரு கிராமத்து நதி, கவிதா பதிப்பகம், சென்னை, பதினொன்றாம் பதிப்பு, 2017
3. சுப்பிரமணியன்.ப, திருக்குறள் தெளிவுரை, இசையரசி பதிப்பகம், திருச்சி, முதற் பதிப்பு
4. வேங்கடசாமி நாட்டார். ந.மு, சிலப்பதிகாரம் மூலமும் உரையும், ராமையா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை, ஏழாம் பதிப்பு 2014
5. வைரமுத்து, தமிழுக்கு நிறமுண்டு, சூர்யா பதிப்பகம், சென்னை, பனிரெண்டாம் பதிப்பு, 2018
6. வைரமுத்து, இந்தப் பூக்கள் விற்பனைக்கு அல்ல, சூர்யா பதிப்பகம், சென்னை, இருபத்து ஏழாம் பதிப்பு, 2018


## *Reference books*


1. *Balasubramanian, K. V., Nattrinai, New Century Book House, Chennai,6th Edition, 2017*
2. *Sirpi, Oru kramathu Nadhi, Kavitha Publications, Chennai, 11th Edition, 2017.*
3. *Subramanian.P, Thirukkural thelivurai, Isaiyarasi Publication, Trichy, First Edition*
4. *Venkatasami Nattar,N.M, Silappathikaram moolamum uraiyum, Ramaiah Publications, Rayapettai, Chennai, Seventh Edition 2014.*
5. *Vairamuthu, Tamizhukku Niramundu, Surya Publications, Chennai, 12th Edition.*
6. *Vairamuthu, Indha Pookkal Virpanaykku Alla, Surya Publications, Chennai, 27th Edition, 2018.*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com